வழங்கப்பட்டுள்ளது. அதில் அவர் தற்போது கட்டிடம் கட்டி பிலிப்ஸ் என்ற பெயரில் மருத்துவ மனையை நடத்தி வருகிறார் மேற்படி நிலம் அரசாணையின்படிதான் ஒப்படை செய்யப் பட்டது ; ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் மிகவும் மதிப்பு வாய்ந்த ஒரு இடமாக இருந்தும், அதைத் தனி நபருக்குப் பட்டா செய்திருக் கின்றார்கள். இனியேனும் அதுபோன்ற விவகாரங்களில், அங்குள்ள மக்களின் கருத்தை அறிந்து செயல்படுத்துவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1974-லேயே நடைபெற்றிருக் கிறது. அப்பொழுதே அங்கேயிருக்கிற பொதுமக்களோ, அங்கே யிருக்கிற நகராட்சி மன்றமோ ஆட்சேபணை எழுப்பியிருப்பார் களோ, என்னவோ தெரியாது. எழுப்பி இருப்பார்களேயானால் அதுபற்றி ஆராய்ந்து தக்க ஒரு முடிவு எடுக்க முடியும். ஆனால், அப்படிப்பட்ட இடங்கள் ஒப்படைக்கப்படுகின்ற சூழ்நிலையில் பொது மக்களோ மற்றவர்களோ ஆட்சேபணை எழுப்புவார்களே யானால் அதைப்பற்றி பரிசீலித்துதான் வருவாய்த்துறையும் மற்றும் அரசும் முடிவெடுக்கும்.

காமராஜர் மாவட்டம், விருதுநகர் தலைமை மருத்துவமனை.

630 (*வினா எண் 8518)—திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம், விருதுநகர் தலைமை மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) அதனை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 132.

(ஆ) ஆம்.

(இ) தலைமையிட மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த மேலும் 48 படுக்கைகள் வசதி கொண்ட கூடுதல் பிரிவு கட்டிடம் மற்றும் அறுவையரங்கு, பிணவறை ஆகியவை கொண்ட கட்டிடங்கள் கட்ட ஆணை வழங்கப்பட்டு கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் காமராஜ் மாவட்டத்தினுடைய தலைநகர். மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலே 300 படுக்கைகளாவது வேண்டும். ஆனால், இருப்பது 132. ஏற்கனவே, 1985-வது ஆண்டு பட்ஜெட்டிலே சிவகங்கை விருதுநகர் பகுதியிலே ரூ. 30 இலட்சம் செலவில் படுக்கை வசதிகளை விஸ்தரிக்கப் போவதாக அறிவிப்பு வந்தது. இப்பொழுது 48 படுக்கைகள்தான் விஸ்தரிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். 300 படுக்கைகளாவது வேண்டும். அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, படுக்கை வசதியை வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையை பொறுத்துத்தான் நிர்ணயிக்க வேண்டுமே தவிர, தலைநகர் என்பதற்காக நிர்ணயிக்க முடியாது. நோயாளிகள் எண்ணிக்கை கூடுமானால், படுக்கை வசதிகளையும் அதிகரிக்க அரசு எப்பொழுதும் தயாராக இருக்கிறது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விவரத்தை சொன்னார்கள். அங்கே அதிகமான நோயாளிகள் பாயிலே, தரையிலே படுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணக்குகளை எடுத்துப் பார்த்தால் விவரம் தெரியும். ஆகவே, அங்கே இட வசதி இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, என்னுடைய கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா மருத்துவ மனைகளிலும் இதுதான் நிலைமையாக இருக்கிறது. ஆகவே, நிதி ஆதாரத்திற்கு ஏற்ப அதை விரிவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

அரசு மருத்துவமனைகள்.

631. (*வினா எண் 8934)—திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, முதுகுளத்தூர் தாலூக்காக்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளுக்கு எந்தவித மருந்தும் சப்ளை செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,